ஊடகக் கல்விச் செயற்றிட்டம் - தேசிய கல்வி நிறுவகம்

12, 13 ஆம் தரங்களுக்கானது

# தொடர்பாடலும் ஊடகக்கல்வியும்

பாடத்திட்டம்

# Communication & Media Studies

**Syllabus**

**for grade 12 & 13**

தேசிய கல்வி நிறுவகம்

2008

**ஊடகக் கல்விச் செயற்றிட்டம் - தேசிய கல்வி நிறுவகம்**
**12, 13 ஆம் தரங்களுக்கானது**

# தொடர்பாடலும் ஊடகக்கல்வியும்

**பாடத்திட்டம்**

## 1. அறிமுகம்

உலகம் பூராவும் ஊடகக் கல்வியைப் பிரபல்யப்படுத்த யுனெஸ்கோ கடந்த சில தசாப்தங்களாக பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதில் மிக முக்கியமான ஆரம்பச் சந்தர்ப்பம் யாதெனில் 19 நாடுகளின் பங்குபற்றலுடன் 1982 இல் ஊடகக்கல்வி தொடர்பாக குருள்வோல்ட் பிரகடனத்தை அங்கீகரித்து வெளியிட்டமையாகும். அதன் மூலம் முழு உலகிலும் கல்விக்குப் பொறுப்பாகவுள்ள நிறுவகங்களுக்கு ஆரம்பக்கல்வி முதல் பல்கலைக்கழகம் வரையும் வளர்ந்தோர் கல்வியிலும் ஊடகக்கல்வியைப் பிரபல்யப்படுத்து மாறு விதந்துரைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சமூகத்துக்கு எழுத்து மற்றும் இலத்திரனியல் ஊடகங்களை அறிவுபூர்வமாகக் கையாளும் அறிவு, திறன், மனப்பாங்குகளை விருத்தி செய்ய முடியும் எனவும், அது வாழ்வதற்குத் தேவையான ஒரு தேர்ச்சியாகும் எனவும் யுனெஸ்கோ பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளது.

குருள்வோல்ட் பிரகடனம் வெளியாகும்போது இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பட்டக் கல்வி மட்டத்தில் தொடர்பாடற் கல்வி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும் பாடசாலை மட்டத்தில் தொடர்பாடற் கற்பித்தல் ஆரம்பமானது 2006 ஆம் ஆண்டில் தரம் 10 இல் தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் என்ற பாடம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னராகும். அதன்படி முதலாவது மாணவர் தொகுதியாக ஐயாயிரம் அளவிலான மாணவர்கள் 2007 இல் க.பொ.(சா.த.) பரீட்சைக்குத் தோற்றினர். அதன்படி அடுத்த கட்டமாக உயர்தரத்துக்கு தொடர்பாடல் ஊடகக் கல்வியை அறிமுகம் செய்வது அத்தியாவசியமானதாகும்.

சுருக்கமாக நோக்குமிடத்து நாம் வாழும் ஊடகத் தகவற் சமூகத்தின் தாக்கத்தில் இருந்து விலகியிருக்க ஒருவராலும் முடியாது. ஊடக, மற்றும் தகவல்களை சரியாக உள்வாங்கிக் கொள்ள முடியுமாவதும், அவற்றைத் தர்க்கரீதியாக விளக்குவதற்குத் தேவையான புலனாய்வு ரீதியான தேர்ச்சி விருத்தியடைந்தால் மட்டுமேயாகும். எனவே நவீன யுகத்தில் ஊடகக் கல்வியின் தேவை மென்மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

மிகப் பரந்த ரீதியாக ஊடகம் மற்றும் தகவல்களைக் கையாளும் இளைஞர்களிடையே யுள்ள தொடர்பாடல் பலத்தை தேசிய அபிவிருத்திக்காகவும், ஒத்துழைப்புடன் கூடிய ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காகவும் வழிப்படுத்துவது அவசியமாகும். கடந்த

சில தசாப்தங்களாக சமூகத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்களைக் கவனத்திற் கொள்ளா திருக்க முடியாது. உதாரணமாக இன்றைய வளர்ந்தோர் சிறுவர்களாக இருந்த காலத்தில் பயன்படுத்தப்படாத விதத்திலான பரந்த தொடர்பாடல் உபகரணங்கள், கருவிகளை இன்றைய பிள்ளைகள் மிகவும் தாராளமாகவும் திறமையாகவும் நம்ப முடியாத அளவு திறன்களை வெளிப்படுத்தும் வகையிலும் கையாள்வது தெரிகிறது. இவ்விடயத்தை பாடசாலைக் கலைத்திட்டம் தயாரிப்பவர்கள் புறக்கணிக்க முடியாது.

எனவே 12, 13 ஆம் தரங்களுக்கான தொடர்பாடல் ஊடகக்கல்விப் பாடத்திட்டத்தைத் தயாரிக்கும்போது பிள்ளைகளிடையே அறிவுபூர்வமான ஊடக அறிவு, விருத்தி, அவர்களின் தொடர்பாடல் திறன், விருத்தி அதனூடாக ஒத்துழைப்புடன் கூடிய சமூக அபிவிருத்தியின் உயிர்ப்பான பங்காளிகளாவதற்கான தேர்ச்சி, விருத்தி என்பன தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. அதனடிப்படையில் செயல்சார் கற்றல் - கற்பித்தல் சூழலொன்றைக் கட்டியெழுப்பத் தேவையான அடிப்படை இப்பாடத்தினால் வழங்கப்படவுள்ளது. உயர் தரத்தில் தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் என்ற பாடத்தைப் பயிலும் மாணவர்களுக்கு எதிர்காலத்தில் தம் வாழ்க்கைப் பாதையை கட்டியெழுப்பிக் கொள்வதற்கான ஒரு நடை முறைப் பிரவேசம் கிடைப்பதுடன் உயர் கல்விக்கான ஒரு நவீன பிரவேசமும் உருவாகும் என உறுதியாகக் கூறலாம்.

## 2. நோக்கங்கள்

(1) எதிர்காலப் பிரசைகளாகும் இன்றைய இளைஞர்களிடையே ஊடக தகவல் அறிவை விருத்தி செய்தல்.

(2) பாடசாலையை விட்டு வெளியேறும் இளம் வயது மாணவர்களிடையே தேசிய அபிவிருத்திச் செயலொழுங்கில் நேரடியாகப் பங்குபற்றுவதற்குரிய அபிவிருத்தி தொடர்பான தொடர்பாடற் தேர்ச்சியை விருத்தி செய்தல்.

(3) விளைதிறன்மிக்க பரந்த ஓர் குடும்ப அலகு மற்றும் சமூகத் தொகுதிக்குள் ஒத்துழைப்புடன் வாழ்வதற்குத் தேவையான ஊடக, மற்றும் தொடர்பாடற் தேர்ச்சியை அபிவிருத்தி செய்தல்.

(4) பொதுவாக உயர் தொடர்பாடல் மற்றும் ஊடகத் தேர்ச்சியுடன் கூடிய மனித நேய முள்ள பிரசைகளைப் பாடசாலையிலிருந்து சமூகத்துக்கு வழங்குவதற்குத் தேவை யான அடிப்படையை உருவாக்குதல்.

## 3. கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்

தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் தரம் 12, 13 பாடத்திட்டத்தின் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு அறிவு, மற்றும் மனப்பாங்கை அடிப்படையாகக் கொண்டு நடைமுறை அனுபவங்களை ஊட்டம் பெறச் செய்வதைத் திட்டமிடப்பட்டுள்ளது. இங்கு நாம் வாழும் உண்மையான, யதார்த்தமான சமூகத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் அன்றாட அனுபவங்களை, கற்றல் அனுபவங்களாக மாற்ற எதிர்பார்க்கப்படுகின்றது. பாடத்திட்டத்தின் பாட அலகுகள் அதற்கியைபாகவே தயாரிக்கப்பட்டுள்ளது.

## 4. பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டங்களும்

(1) பாடசாலை ஊடகக் கழகமொன்றை (School Media Club) செயற்படு நிலையில் கொண்டு நடத்துதல்.

(2) அபிவிருத்திசார் ஊடகப் பயிற்சி வாரத்தில் (Development Oriented Media Work Experience Week) பங்குபற்றல்.

(3) பாடசாலை ஊடகக் கல்வி வாரமொன்றை (School Media Education Week) வருடாந்தம் நடத்துதல்.

(4) ஏப்ரல் 23 ஐ மையமாகக் கொண்டு யுனெஸ்கோ உலக புத்தக தினத்தை (UNESCO World Book Day) நடத்துதல்.

(5) அபிவிருத்தித் தொடர்பாடல் / தொடர்பாடல் திறன் / ஒத்துழைப்புக்கான தொடர்பாடல் என்ற தலைப்புகளில் மாதாந்த விரிவுரைகள் / கருத்தரங்குகள் நடத்துதல்.

(6) ஓர் அபிவிருத்தித் திட்டத்தை ஆராயும் நோக்கிலான களப் பிரயாணம் செல்லல்.

(7) பொலிஸ் நிலையத்துடன் ஒன்றிணைந்து சமூக, உள்ளக அமைதியைப் பேணுவது தொடர்பான உண்மைநிலையை ஆராய்தல்.

(8) பாடசாலையில் எமது பாரம்பரியப் பாடசாலை நிலையம் (Our Herritage School Center) ஒன்றை தாபித்தல்.

(9) தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்தித் தொனிப்பொருள்களினூடாக அறிக்கை தயாரித்தல் மேம்பாட்டு வேலைத்திட்டமொன்றைத் திட்டமிட்டு நடத்துதல்.

(10) பாடசாலை நூலகத்தில் ஊடகத்துறை சார்ந்த நூல்கள், ஆவணங்கள், வெளியீடுகள், பல்லூடக உபகரணங்கள் என்பவற்றைத் திரட்டுவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயார் செய்து நடைமுறைப்படுத்தல்.

(11) உயர்தர ஊடகச் செய்திகள் அடங்கிய ஒரு சுவர்ப்பத்திரிகையை குறைந்தபட்சம் மாதாந்தம் வெளியிடல்.

(12) வேறு பாடசாலைகளுடன் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளும் வேலைத்திட்டங் களை நடைமுறைப்படுத்தல்.

(13) ஊடகக் கற்கை வாரத்தில் ஒரு நாளை பாடசாலைப் புன்னகைத்தினம் (School Smile Day) என்ற பெயரில் தொடர்பாடல் விருத்தி வேலைத்திட்டமொன்றை நடை முறைப்படுத்தல்.

(14) ஊடகம் தொடர்பாகவும் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் கட்டுரைகள் தயாரித்தல்.

(15) ஊடக விமர்சன வேலைத்திட்டமொன்றை மாதாந்தம் நடத்துதல்.

(16) ஊடகங்களுக்கான துலங்கல்களைக் காட்டும் ஒரு செயலொழுங்கை திட்டமிட்டு நடத்துதல்.

(17) ஆரம்ப வகுப்புப் பிள்ளைகளின் பெற்றோர்களுக்கான ஊடக அறிவு என்ற தொனிப் பொருளின் வேலைத்திட்டத்தைத் திட்டமிடல்.

(18) சுயபலத்தை அடிப்படையாகக் கொண்டு சுயவெற்றிக்காக நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக பல்வேறு வேலைத்திட்டங்களை பரீட்சித்துப் பார்த்தல்.

(19) ஊடகங்களில் தொடர்பாடப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் பற்றி ஆராய்தல்.

(20) பாடத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித் தொடர்பாடல் செயல்திட்ட சுருக்கமொன்று உள்ளடக்கப்படும் வகையில் வருடாந்த சஞ்சிகை வெளியிடல்.

## 5. கணிப்பீடு

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பொது விதிகளின்படி கணிப்பீடு மேற்கொள்ளப் படும்.

## 4.1 பாடத்திட்டம் (தரம் 12)

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| **1. தொடர்பாடலின் இயல்பு, செயலொழுங்கு, வகை ஒழுங்குகளை ஒப்பீட்டு ரீதியில் விளக்குவார்.** | | **1. தொடர்பாடல் கற்றற் பிரவேசம்**<br>*பாடவேளைகள் - 50* |
| | 1.1 தொடர்பாடலை ஆராய்வதற்காக அதன் பரவல் இயல்பை வரைவிலக்கணம், எண்ணக்கரு என்பவற்றை விளக்குதல். | **1.1 தொடர்பாடற் பிரவேசம்**<br>(1) தொடர்பாடல் அறிமுகம்<br>(2) தொடர்பாடற் பரவல்<br>(3) தொடர்பாடல், எண்ணக்கரு வரைவிலக்கணம்<br>(4) தொடர்பாடலின் இயல்பு |
| | 1.2 தொடர்பாடலின் அடிப்படைகள், மாதிரிகள், பணிகளை விளக்குவார். | **1.2 தொடர்பாடற் செயலொழுங்கு**<br>(1) தொடர்பாடல் அடிப்படைகள்<br>(2) தொடர்பாடல் மாதிரிகள்<br>(3) தொடர்பாடலின் பணிகள் |
| | 1.3 தொடர்பாடலின் பல்வேறு வளங்களை ஒப்பீட்டு ரீதியாக விளக்குவார். | **1.3 தொடர்பாடல் வகைப்படுத்தல்**<br>(1) தனியாள் தொடர்பாடல்<br>(2) தனியாட்களுக்கிடையில் தொடர்பாடல்<br>(3) கூட்டுத் தொடர்பாடல்<br>(4) வெகுஜனத் தொடர்பாடல் |
| | 1.4 பல்வேறு தொடர் பாடல் விதிகளை ஒப்பீட்டு ரீதியாக விளக்குவார். | **1.4 தொடர்பாடல் விதிகள்**<br>(1) வாய்மொழித் தொடர்பாடல்<br>(2) வாய்மொழியல்லாத தொடர்பாடல்<br>(3) எழுத்து மூலத் தொடர்பாடல்<br>(4) கட்புல தொடர்பாடல்<br>(5) செவிப்புலத் தொடர்பாடல்<br>(6) முறைசார், முறைசாரா தொடர்பாடல் |

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| **2. தொடர்பாடலுக்கும் சமூகத்துக்குமிடையிலான தொடர்புகளும், சமூக வகிபங்குகள், நவீன பூகோளமய சமூகத்தில் தொடர்பாடற் போக்குகள் என்பவற்றை தர்க்கரீதியாக விளக்குவார்.** | | **2. தொடர்பாடலும் சமூகமும்**<br>*50 பாடவேளைகள்* |
| | 2.1 சமூகத்தின் தோற்றம் வளர்ச்சி, கட்டமைப்பு என்பவற்றை வரைவிலக்கணப்படுத்தி சமூக சமநிலையையும் அதன் அறிவுத் தேடலின் இயல்பையும் விளக்குவார். | **2.1 சமூகம் பற்றிய விளக்கம்**<br>(1) சமூகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்<br>(2) சமூகக் கட்டமைப்பு<br>(3) சமூக வளங்களும் அதிகாரமையமும்<br>(4) அறிவுத் தேடல் |
| | 2.2 தொடர்பாடலுக்கும் சமூகத்துக்குமிடையிலான தொடர்புகளை விளக்குவார். | **2.2 தொடர்பாடலுக்கும் சமூகத்துக்குமிடையிலான தொடர்பு**<br>(1) சமூகமும் தொடர்பாடல் அபிவிருத்தியும்<br>(2) சமூகத் தொடர்பாடல் அறிவு<br>(3) தொடர்பாடலின் சமூகச் செல்வாக்கு<br>(4) தொடர்பாடலின் முன்னோடி விடயங்கள் |
| | 2.3 தொடர்பாடலின் சமூக வகிபாகத்தை விளக்குவார். | **2.3 தொடர்பாடலின் சமூக வகிபாகம்**<br>(1) தனியார் தேவைகளுக்கான தொடர்பாடல்<br>(2) சமூகத் தேவைகளுக்கான தொடர்பாடல்<br>(3) தகவல் தயாரிப்புப் பணிகள்<br>(4) சமூக மயமாக்கல் |

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| | 2.4 உலகமயமாக் களையும் தொடர்பாடற் போக்குகளையும் விளக்குவார். | 2.4 உலகமயமாக்கமும் தொடர்பாடற போக்குகளும்<br>(1) உலகமயமாக்கல் எண்ணக்கரு<br>(2) அறிவுச் சமூகம்<br>(3) பிரசைகள் ஊடகம்<br>(4) மாற்றுவழிகளும் எதிர்வு மனப்பாங்கு ஊடகமும் |
| **3. ஆளிடை, கூட்டு, மற்றும் உபகரண உதவி, தொடர்பாடற் தேர்ச்சிகளை வெளிப் படுத்துவார்.** | | **3. தொடர்பாடற்திறனும் தேர்ச்சியும்**<br>*பாடவேளைகள் - 50* |
| | 3.1 தனியாள் தேர்ச்சியை பயன்படுத்துவார். | **3.1 தனியாள் தேர்ச்சி**<br>(1) தகவல் திரட்டல், ஞாபகம், ஞாபகப்படுத்தல்<br>(2) மனதை ஆயத்தப்படுத்தல்<br>(3) தர்க்க ரீதியான சிந்தனையும் தீர்மானம் எடுத்தலும்<br>(4) சுய எண்ணக்கரு விருத்தி<br>(5) கற்றல் |
| | 3.2 ஆளிடைத் தேர்ச்சி களை வெளிப் படுத்துவார். | **3.2 ஆளிடைத் தேர்ச்சி**<br>(1) விளைதிறனுள்ள பேச்சு<br>(2) கேட்டல் தேர்ச்சி விருத்தி<br>(3) ஒத்துழைப்பு<br>(4) ஒழுக்கப்பண்பு |
| | 3.3 கூட்டுத் தொடர் பாடல் தேர்ச்சி களை வெளிப் படுத்துவார். | **3.3 கூட்டு தொடர்பாடற் தேர்ச்சி**<br>(1) கூட்டத்தை இனங்காணல்<br>(2) கூட்டுப்பணி பொறுப்பும் வகைகூறலும்<br>(3) நேர்முகக் கலந்துரையாடல்<br>(4) முரண்பாடும் உடன்பாடும்<br>(5) ஒழுக்கப்பண்பு |

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| | 3.4 தொடர்பாடலுக்காக பல்வேறு உபகரணங்களையும் பயன்படுத்தும் தேர்ச்சியை வெளிக்காட்டுவார். | **3.4 உபகரண உதவி தொடர் பாடற் தேர்ச்சி**<br>(1) பேச்சுத் தொடர்பாடல் உபகரணப் பாவனை<br>(2) எறிவை தொடர்பாடல் உபகரணங்கள் பாவனை<br>(3) எறிவையல்லாத தொடர்பாடல் உபகரணப் பாவனை<br>(4) சுற்றாடல் அல்லது ஆக்க ரீதியான உபகரணப் பாவனை |
| **4. மொழியின் இயல்பு பற்றி விளக்கி பல்வேறு ஊடகங்களில் மொழி பயன் படுத்தப்படும் விதத்தை ஒப்பீட்டு ரீதியாகப் பகுப்பாய் வார்.** | | **4. மொழியும் வெகுஜன ஊடகப் பாவனையும்**<br>*பாடவேளைகள் - 50* |
| | 4.1 மொழியின் இயல்பு அதன் உபயோகம் மொழியின் தொடர்பாடல் வகிபாகத்தை விளக்குவார். | **4.1 மொழியை இனங்காணல்**<br>(1) மொழியின் வரலாற்று ரீதியான வளர்ச்சி<br>(2) மொழியின் தொடர்பாடல் வகிபாகம்<br>(3) உயிர்ப்பு மொழிப்போக்கு<br>(4) மொழியின் ஏற்புடைமையும் ஏற்புடைமையின்மையும்<br>(5) உப மொழிகள் |
| | 4.2 மொழியின் பல்வேறு உபயோகங்களை ஒப்பிட்டுக் காட்டுவார். | **4.2 மொழிப் பிரயோக வகைகள்**<br>(1) மொழிதல்<br>(2) உரு<br>(3) விவரித்தல்<br>(4) பேச்சு<br>(5) எழுத்து |

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| | 4.3 பல்வேறு ஊடகங்கள் தொடர்பில் மொழியைக் கையாளும் முறைகளையும் கோலங்களையும் ஒப்பீட்டு ரீதியாகப் பரீட்சித்துப் பார்ப்பார். | **4.3 வெகுஜன ஊடகம் தொடர்பில் மொழியைக் கையாள்தல்.**<br>(1) அச்சூடகத்துக்கான ஆவணம்<br>(2) வானொலி ஊடகத்துக்கான ஆவணம், மொழிப் பயன்பாடும் பேச்சும்<br>(3) தொலைக்காட்சி ஊடகத்துக் கான மொழிப் பயன்பாடும் பேச்சும்<br>(4) புதிய ஊடகங்களில் மொழி யைக் கையாள்தல். |
| | 4.4 ஊடகங்களில் மொழிப் பயன் பாட்டின் வலிவு நலிவுகள் | **4.4 ஊடகங்களில் மொழிப் பயன் பாடு தொடர்பான வலிவுகள், நலிவுகள், மட்டுப்பாடுகள்**<br>(1) ஊடகத்தில் மொழிப் பயன் பாட்டின் வலிவுகள்<br>(2) ஊடகத்தில் மொழிப் பயன் பாட்டின் நலிவுகள்<br>(3) ஊடகத்தில் மொழிப் பயன் பாட்டுக்கான மட்டுப்பாடுகள் |
| **5. பொதுசனத் தொடர்புத் திட்ட மொன்றை நடைமுறைப் படுத்துவதற்காக கருவிகள், முறைகளைப் பயன்படுத்து தலைப் பரீட்சித்துப் பார்ப்பார்.** | | **5. பொதுசனத் தொடர்பு**<br>*பாடவேளைகள் - 50* |
| | 5.1 இலங்கையின் சிறப்பான நிலைமை களை மையமாகக் கொண்டு பொது சனத்தொடர்பு எத்தகையது என்பதை ஆராய்வார். | **5.1 பொதுசனத்தொடர்பு அறிமுகம்**<br>(1) “மக்கள்” வரைவிலக்கணப் படுத்தல்<br>(2) மக்கள் தொடர்பின் தேவையும் முக்கியத்துவமும்<br>(3) பொதுசனத் தொடர்பு வரைவிலக்கணம்<br>(4) பொதுசனத் தொடர்புப் பயன்பாடு (இலங்கை சார்பாக) |

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| | 5.2 பொதுசனத் தொடர்புக்காகப் பயன்படுத்தக்கூடிய பல்வேறு கருவிகள் முறைகளைப் பரீட்சித்துப் பார்ப்பார். | **5.2 பொதுசனத் தொடர்புக் கருவி களும் வகைகளும்**<br>(1) அச்சூடகம்<br>(2) கட்புல செவிப்புல ஊடகம்<br>(3) புகைப்படம்<br>(4) கண்காட்சி<br>(5) ஊடகத் தொடர்பு<br>(6) அனுசரணை<br>(7) சுற்றாடற் கருவிகள் |
| | 5.3 பொதுசனத் தொடர்புகளுக்காக பல்வேறு தேர்ச்சி களை வெளிப் படுத்துவார். | **5.3 பொதுசனத் தொடர்புத் தேர்ச்சி**<br>(1) அச்சூடகத் தேர்ச்சி<br>(2) ஊடக அறிவித்தல்<br>(3) ஊடகக் கலந்துரையாடல்<br>(4) சுற்றாடல் ஆக்கம்<br>(5) தனியாள் விம்பம் |
| | 5.4 பொதுசனத் தொடர்பு வேலைத் திட்டங்களுக்கான திட்டமிடல் படிமுறை களைப் பரீட்சித்துப் பார்ப்பார். | **5.4 பொதுசனத் தொடர்பு திட்டம்**<br>(1) நிலைமைப் பகுப்பாய்வும் பயனாளிகளை இனங்காணலும்<br>(2) பொதுசனத் தொடர்பு இலக்கு கள், நோக்கங்களைக் கட்டி யெழுப்புதல்.<br>(3) முறைகளை, உத்திகளைத் தீர்மானித்தல்.<br>(4) திட்டமிடல்<br>(5) முன் மதிப்பீடு |
| **6. ஊடகக் கலா சாரத்தின் இயல்பு, பரவல் மற்றும் செல்வாக்கும் சந்தையுட னான தொடர்பு களையும் விளக்குவார்.** | | **6. ஊடகக் கலாசாரம்**<br>*பாடவேளைகள - 50* |
| | 6.1 ஊடகக் கலாசாரத் தின் இயல்பு, தேவை, பரவல் என்பவற்றை விளக்குவார். | **6.1 ஊடகக் கலாசாரத்தை இனங் காணல்.**<br>(1) கலாசாரம் பற்றிய வரைவிலக் கணமும் எண்ணக்கருவும்<br>(2) ஊடகத்துக்கும் கலாசாரத்துக்கு மிடையேயுள்ள தொடர்பு |

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| | | (3) ஊடகக் கலாசாரத்தின் சமூகத் தேவைகள்<br>(4) ஊடகக் கலாசாரம் மக்கள் கலாசாரத்தின் ஒரு பரவலாக |
| | 6.2 ஊடகக் கலாசார விரிவாக்கத்தையும் இணைப்பையும் விளக்குவார். | **6.2 ஊடகக் கலாசார விரிவும் வீச்சும்**<br>(1) ஊடகக் கலாசார விரிவாக்கத்தினதும் வீச்சினதும் இயல்பு.<br>(2) ஊடகக் கலாசாரமும் தொழில் நுட்பமும்<br>(3) ஊடகக் கலாசாரமும் சமூக மாற்றமும்<br>(4) ஊடகக் கலாசார வீச்சின் சமமின்மை |
| | 6.3 ஊடகக் கலாசாரத்தின் செல்வாக்கை சமநிலையாக நின்று விளக்குவார். | **6.3 ஊடகக் கலாசாரத்தின் செல்வாக்கு**<br>(1) கலாசார அதிர்வு<br>(2) கலாசார ஆக்கிரமிப்பு<br>(3) கலாசாரப் பரிமாற்றம் |
| | 6.4 ஊடகக் கலாசாரத்துக்கும் சந்தைக்குமிடையிலான இடைத்தொடர்பை விளக்குவார். | **6.4 ஊடகக் கலாசாரமும் சந்தையும்**<br>(1) உலகமயமாக்கலும் தாராண்மைவாதமும்<br>(2) வணிகக் கல்வியும் ஊடகக் கலாசாரமும்<br>(3) சந்தை விரிவாக்கமும் ஊடகக் கலாசாரமும்<br>(4) ஊடக விளம்பரமும் சமூகமும் |

## பாடத்திட்டம் (தரம் 13)

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| **7. பொறுப்பு வாய்ந்த ஒரு பிரசை என்ற வகையில் கூட்டாக வாழும் ஒரு சமூகத்தை உருவாக்குவதில் தொடர்பாடலைப் பிரயோகிக்கும் தேர்ச்சியை வெளிக்காட்டுவார்.** | | **7. கூடி வாழ்வதற்கான தொடர்பாடல்**<br>*பாடவேளைகள் - 50* |
| | 7.1 முரண்பாட்டின் சகல பகுதிகளையும் விசாரித்து முரண்பாட்டை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு வெற்றி - வெற்றி மாதிரியை உபயோகிக்கும் விதத்தைப் பரீட்சித்துப் பார்ப்பார். | **7.1 முரண்பாடு, முரண்பாட்டு தீர்வு இணக்கப்பாடு**<br>(1) முரண்பாடு வரைவிலக்கணம்<br>(2) முரண்பாடு உருவாகும் பிரிவினரும் முரண்பாடு நிலைத்தலும்<br>(3) முரண்பாட்டு முகாமைத்துவமும் நடுநிலையாளர்களும்<br>(4) வெற்றி - வெற்றி மாதிரி |
| | 7.2 உன்னதமான நடத்தைக்கான உள அமைதியை உருவாக்குவதற்காக உள்ளகத் தொடர்பாடல் முறைகளையும் பல்வேறு உத்திகளையும் பரீட்சித்துப் பார்ப்பார். | 7.2 உளஅமைதியும் தனியாள் நடத்தையும்<br>(1) உள்ளம், நடத்தை என்பவற்றுக்கிடையிலான தொடர்பு<br>(2) உளச் செயலொழுங்கின் இயல்பு<br>(3) எளிமையான உள அமுக்கங்களும் அவற்றை எதிர்கொள்ளலும்<br>(4) உள அமைதி கெடலும் சிறந்த நடத்தைகளும்<br>(5) உள அமைதி பற்றிய சமயக் கருத்துக்கள்<br>(6) மானிட அமைதியும் மனித நடத்தை விருத்தியும் |

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| | 7.3 அமைதியும் கூடிவாழும் இயல்பும் கொண்ட ஒரு வீட்டை நடத்துவதற்காக பொறுப்புள்ள ஒரு பிரசையிடம் தொடர்பாடல் தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வார். | **7.3 அமைதியும் கூடிவாழ்தலும்**<br>(1) வீட்டினுள் அமைதி, கூடிவாழும் இயல்பு என்பவற்றின் பெறுமதியும் முக்கியத்துவமும்<br>(2) வீட்டினுள் அமைதி, கூடி வாழ்தல், தொடர்பாடல்<br>(3) வீட்டில் அமைதி கெடுதலும், அதன் தீயவிளைவுகளும்<br>(4) வீட்டில் அமைதியும், கூடி வாழ்தல் முகாமைத்துவமும்<br>(5) ஓய்வு, பொழுதுபோக்கு, மனஅமைதி |
| | 7.4 சமாதானமும் கூடிவாழ் தன்மையும் கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்குதல். கொண்டு நடத்துதலுக்கான பொறுப்புள்ள ஒரு பிரசையிடம் இருக்கவேண்டிய தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வார். | **7.4 சமூக அமைதியும் கூடிவாழ்தலும்**<br>(1) சமூகப் பல்வகைமை, கூடிவாழ் இயல்பு என்பவற்றின் தேவை.<br>(2) குடியுரிமையும் பணிகளும்<br>(3) சமூக அமைதி, கூடி வாழ்தல் தொடர்பாடல்<br>(4) சமூக அமைதி கெடலும், அதன் தீய விளைவுகளும்<br>(5) அர்ப்பணிப்பு, சகிப்புத்தன்மை, பொறுப்பேற்றல். |
| | 7.5 ஊடக வன்முறையின் உண்மையான இயல்பைக் கண்டறிந்து அதனை எதிர்கொள்ளும் முறைகளையும் உத்திகளையும் பரீட்சித்துப் பார்ப்பார். | **7.5 ஊடக வன்முறை**<br>(1) வன்முறை வரைவிலக்கணம்<br>(2) ஊடகங்களின் வன்முறைத் தோற்றம்<br>(3) வன்முறையின் கவர்ச்சி<br>(4) ஊடக வன்முறையின் சமூக, வீட்டுச் செல்வாக்கு<br>(5) ஊடக வன்முறைப் பகுப்பாய்வு, கட்டுப்பாடு |

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| **8. அபிவிருத்தித் தொடர்பாடலின் கோட்பாட்டு அடிப்படை இயல்புகள், வலய அனுபவங்களைப் பகுப்பாய்வு செய்து அபிவிருத்தித் தொடர்பாடலின் பிரச்சினைகள், சவால்களைப் பிரித்து விளக்குவார்.** | | **8. அபிவிருத்தித் தொடர்பாடல்**<br>*பாடவேளைகள் - 50* |
| | 8.1 அபிவிருத்தித் தொடர்பாடல் எண்ணக்கரு அதன் அடிப்படை இயல்புகள், அதன் பயன்பாடு, மற்றும் வெகுஜன ஊடகத்துடனான இடைத் தொடர்புகளை விளக்குவார். | **8.1 அபிவிருத்தித் தொடர்பாடல் அறிமுகம்**<br>(1) அபிவிருத்தித் தொடர்பாடல் எண்ணக்கருவின் தோற்றம்<br>(2) அபிவிருத்தித் தொடர்பாடலின் அடிப்படை இயல்புகள்<br>(3) அபிவிருத்தித் தொடர்பாடலின் பயன்பாடு<br>(4) அபிவிருத்தித் தொடர்பாடலும் வெகுஜன ஊடகமும் |
| | 8.2 அபிவிருத்திப் பிரகடனத்தின் இயல்பு ஊடகத்தை மையமாக வைத்துத் தயாரித்தலும், மேன்பாடு என்பவற்றைப் பரீட்சித்துப் பார்ப்பார். | **8.2 அபிவிருத்திப் பிரகடனம்**<br>(1) அபிவிருத்திப் பிரகடனம் அறிமுகம்<br>(2) அபிவிருத்திப் பிரகடனத்தின் ஊடகம்<br>(3) அபிவிருத்திப் பிரகடன ஆக்கம்<br>(4) அபிவிருத்திப் பிரகடன மேம்பாடு |
| | 8.3 மரபு ரீதியான, நவீன அபிவிருத்தி உத்திகளையும் மக்கள் பங்குபற்றல் முறைகளையும் கண்டறிந்து எடுத்துக்காட்டுதல்களை விமர்சிப்பார். | **8.3 அபிவிருத்தித் தொடர்பாடல் உத்திகள்**<br>(1) மரபுரீதியான அபிவிருத்தித் தொடர்பாடல் முறைகள்<br>(2) நவீன அபிவிருத்தித் தொடர்பாடல் முறைகள்<br>(3) மக்கள் தொடர்பு முறைகள்<br>(4) அபிவிருத்தித் தொடர்பாடல் எடுத்துக்காட்டுதல். |

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| | 5.4 அபிவிருத்தித் தொடர்பாடல் பிரச்சினைகள், சவால்களை ஒப்பிட்டு விளக்குவார். | **8.4 அபிவிருத்தித் தொடர்பாடல் பிரச்சினைகள், சவால்கள்**<br>(1) அபிவிருத்திக் கோட்பாடு பற்றிய பிரச்சினைகள்<br>(2) எண்ணக்கருசார் பிரச்சினைகள்<br>(3) தகவற்படுத்தலின் சமமின்மைகள்<br>(4) அரசியல், கலாசாரப் பிரச்சினைகள் |
| **9. ஆக்கரீதியான தொடர்பாடலின் இயல்பு, கோட்பாடு, மற்றும் பயன்பாடு இயல்பை அடிப்படையாகக் கொண்டு மக்கள் வெளியீடுகளை ஆராய்வார்.** | | **9. ஆக்கரீதியான தொடர்பாடல்**<br>*பாடவேளைகள் - 50* |
| | 9.1 ஆக்கத் தொடர்பாடலின் இயல்பு மூலாதார வளங்கள் மற்றும் தேடல் முறைகளை ஆராய்வார். | **9.1 ஆக்கரீதியான தொடர்பாடற் பிரவேசம்**<br>(1) ஆக்கரீதியான தொடர்பாடல் அறிமுகம்<br>(2) ஆக்கத் தொடர்பாடல் மூலாதாரக் கற்கை<br>(3) ஆக்கத் தொடர்பாடல் வகைப்படுத்தல்<br>(4) ஆக்கத் தொடர்பாடல் தேடல் |
| | 9.2 ஆக்கத் தொடர்பாடலின் ஆக்கக் கோட்பாடுகளை ஆராய்ந்து பயன்படுத்தலைப் பரீட்சித்துப் பார்ப்பார். | **9.2 ஆக்கம் - கோட்பாடும் பயன்பாடும்**<br>(1) ஆக்கச்சிந்தனையும் அவதானிப்பும்<br>(2) ஆக்க எழுத்து<br>(3) ஆக்க வடிவமைப்பும் பேச்சும்<br>(4) ஆக்க வாசிப்பு<br>(5) ஆக்கச் சித்திரம், புகைப்படமும் வடிவமும் |

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| | 9.3 ஆக்கத் தொடர் பாடலுக்குப் பயன் படுத்தக்கூடிய பல்வேறு மக்கள் மரபு தொடர்பான தேர்ச்சிகளை வெளிப்படுத்துவார்.<br><br>9.4 ஆக்கத் தொடர் பாடலின் பல்வேறு ஆக்கரீதியான வெளியீட்டு முறை களைப் பரீட்சித்துப் பார்ப்பார். | **9.3 ஆக்கத் தொடர்பாடலும் மக்கள் மரபுக் கற்கையும்**<br>(1) பழங்கதை<br>(2) கிராமியப் பாடல்<br>(3) மக்கள் வழிபாடு<br>(4) கிராமியக் கதைகள்<br>(5) கிராமிய விளையாட்டுக்கள்<br>(6) சாத்துதல்<br>(7) கிராமியக்கூத்து<br>(8) கிராமியக்கதைகள்<br>(9) மரபுவழிச் சமயம்<br><br>**9.4 ஆக்கரீதியான வெளியீட்டு முறைகள்**<br>(1) ஆக்கத் தனித்துவம்<br>(2) பயன் பெறுநர் மைய ஆக்க பிரகடனம்<br>(3) ஆக்கரீதியான முன்வைப்பு உத்திகள்<br>(4) முன்பயிற்சி, முன்மதிப்பீடு<br>(5) முன்வைப்பு |
| **10.ஊடக விமர் சனத்தின் இயல்பு, உள்ளடக்கம், பிரவேசம் என்பவற்றை ஒப்பீட்டு ரீதியாக விளக்குவார்.** | 10.1 ஊடக விமர்சனத் தின் இயல்பு அதன் அடிப்படைகள், சமூகத்தேவை மற்றும் ஊடக விமர்சணம் பற்றி ஆராய்வார். | **10. விமர்சனம்**<br>*பாடவேளைகள் - 50*<br><br>**10.1 ஊடக விமர்சனத்தின் உள்ளடக்கம்**<br>(1) ஊடக விமர்சனத்தின் இயல்பு<br>(2) ஊடக விமர்சனத்தின் சமூகத் தேவை<br>(3) ஊடக விமர்சனத்தின் அடிப்படைகள்<br>(4) ஊடக விமர்சகர் |

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| | 10.2 ஊடக விமர்சனத் தின்போது வெகு ஜன ஊடக உள்ளடக்கம் பற்றிய காரணி களை ஒப்பீட்டு ரீதியாக விளக்குவார். | **10.2 ஊடக விமர்சனத்தின் உள்ளடக்கம்**<br>(1) வெகுஜன ஊடகத்தின் சமமும் சமமின்மையும்<br>(2) அச்சூடக விதிகள்<br>(3) வானொலி ஊடக விதிகள்<br>(4) தொலைக்காட்சி ஊடக விதிகள்<br>(5) ஊடக ஒப்பீடு |
| | 10.3 ஊடக விமர்சனத் துக்காகப் பயன் படுத்தக்கூடிய பல்வேறு பிரவேசங் களை சமநிலை யில் பரீட்சித்துப் பார்ப்பார். | **10.3 ஊடக விமர்சனப் பிரவேசம்**<br>(1) ஒப்பீடும் பகுப்பாய்வும்<br>(2) அழகியற் பிரவேசம்<br>(3) மொழிரீதியான பிரவேசம்<br>(4) பண்பாட்டு ரீதியான பிரவேசம்<br>(5) அரசியல் ரீதியான பிரவேசம்<br>(6) வரலாற்று ரீதியான பிரவேசம் |
| **11. ஊடக அறிவை பல்வேறு கோணங் களில் புலனாய்ந்து விமர்சன ரீதியான பயனாளித் தேர்ச்சி களை வெளிப் படுத்துவார்.** | | **11. ஊடக அறிவு**<br>*பாடவேளைகள் - 50* |
| | 11.1 ஊடக அறிவின் இயல்பு, அவசியம் அமிசங்கள் என்பன வற்றின் அடிப்படை யில் ஊடகங்கள் கல்வியுடனான தொடர்பை விளக்குவார். | **11.1 ஊடக அறிவு - அறிமுகம்**<br>(1) ஊடக அறிவு வரைவிலக்கணம்<br>(2) ஊடக அறிவின் அவசியம்<br>(3) ஊடக அறிவின் எல்லைகளும் அமிசங்களும்<br>(4) ஊடக அறிவும் ஊடகக் கல்வியும் |

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| | 11.2 வீட்டினதும் பொதுவாக சமூகத்தினதும் நிலைப்பாடு குறித்த வெகுஜன ஊடகச் செல்வாக்கை விளக்குவார். | **11.2 வீடு, சமூகம், வெகுஜன ஊடகம்**<br>(1) இலத்திரனியல் ஊடகத்தின் உள்ளக ஆக்கிரமிப்பு<br>(2) வீட்டுக் கலாசாரத்தின் மீது இலத்திரனியல் ஊடகத்தின் தாக்கம்<br>(3) ஒரு கற்றல் கருவியாக வெகுஜன ஊடகம்<br>(4) வெகுஜன ஊடகமும் சமூக தனியாள் நிகழ்ச்சித்திட்டமும் |
| | 11.3 புகழ் கலாசாரத்தின் இயல்பை பல்வேறு கோணங்களில் புலனாய்ந்து அதன் இயல்பை விரிவாக விளக்குவார். | **11.3 புகழ் கலாசாரம்**<br>(1) புகழ் கலாசாரம் அறிமுகம்<br>(2) ஊடகச் சந்தையின் செயற்பாடு<br>(3) புகழ் கலாசார அமிசங்கள்<br>(4) புகழ் கலாசாரத்தின் செயற்பாடும் அதன் பிரிவினரும்<br>(5) புகழ் கலாசாரத்தின் செல்வாக்கு |
| | 11.4 ஊடகப் பிரதிநிதித்துவத்தின் இயல்பினை ஆராய்ந்து அதில் பொதிந்துள்ள உட்கருத்தைப் புரிந்து கொள்ளும் முறைகளையும் உத்திகளையும் பரீட்சித்துப் பார்ப்பார். | **11.4 ஊடகப் பிரதிநிதித்துவமும் உட்கருத்தும்**<br>(1) ஊடகப் பிரதிநிதித்துவம் வரைவிலக்கணம்<br>(2) ஊடக யதார்த்தம் சமூக மனப்பாங்கு<br>(3) உட்கருத்தைப் புரிந்து கொள்ளல்<br>(4) ஊடகப் பிரதிநிதித்துவமும் சமூக வகிபாகமும் |
| | 11.5 ஊடக நிறுவனங்களுக்கும் பயனாளிகளுக்கு மிடையேயுள்ள தொடர்புகளை விளக்கி விமர்சனத் தேர்ச்சியை வெளிக் காட்டுவார். | **11.5 விமர்சன ரீதியான பயனாளிகள்**<br>(1) பயனாளிகள் இயல்பை அறிதல்<br>(2) வெகுஜன ஊடக நிறுவனங்களும் பயனாளிகள் நோக்கங்களும்<br>(3) ஊடக, பயனாளி பரஸ்பரச் செல்வாக்கு<br>(4) விமர்சன ரீதியான பயனாளிகள் தேர்ச்சி |

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| **12. அபிவிருத் தித் தொடர் பாடல் செயற்திட்ட மொன்றைத் திட்டமிட்டுச் செயற் படுத்தி இறுதி அறிக் கையை முன்வைப் பது வரை யுள்ள மொத்தச் செய லொழுங்கு தொடர்பான தேரச்சியை வெளிக் காட்டுவார்.** | | **12. அபிவிருத்தித் தொடர்பாடல் செயற்றிட்டம்**<br>*பாடவேளைகள் - 50* |
| | 12.1 அபிவிருத்தித் தொடர்பாடல் செயற்திட்ட மொன்றுக்கான ஒரு பிரேரணை யைத் தயாரிப்பது தொடர்பான தகவல்களைத் திரட்டி முடிவு களுக்கு வரும் தேர்ச்சியை வெளிக் காட்டுவார். | **12.1 அபிவிருத்தித் தொடர்பாடல் பிரவேசம்**<br>(1) முன்கலந்துரையாடல்<br>(2) தகவல் திரட்டும் முறைகளை முடிவு செய்தல்.<br>(3) தகவல் திரட்டும் உபகரணங் கள் தயாரிப்பு<br>(4) தகவல் திரட்டலும் பகுப்பாய்வும்<br>(5) செயற்திட்டம் தொடர்பான ஆரம்ப முடிவுகளுக்கு வருதல் |
| | 12.2 அபிவிருத்தித் தொடர்பாடல் பற்றிய சிறிய செயற்திட்டப் பிரேரணையொன் றைத் தயாரிக்கும் தேர்ச்சியை வெளிக்காட்டுவார். | **12.2 செயற்திட்டப் பிரேரணை தயாரிப்பு**<br>(1) இலக்கும் நோக்கும்<br>(2) பணிகளும் எல்லைகளும்<br>(3) பங்குதாரர்களும் நிறுவனக் கட்டமைப்பும்<br>(4) முறைகளும் உத்திகளும்<br>(5) வரவுசெலவுத்திட்டமும் வளப் பிரயோகமும் |

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | பாட உள்ளடக்கம் |
|---|---|---|
| | | (6) காலச்சட்டகம், பொறுப்புக்கள், நியதிகள்<br>(7) எதிர்பார்க்கும் பெறுபேறு<br>(8) மதிப்பீட்டுச் செயலொழுங்கு |
| | 12.3 அபிவிருத்தித் தொடர்பாடல் செயற்திட்ட மொன்றை நடை முறைப்படுத்தும் தேர்ச்சியை வெளிக்காட்டுவார். | **12.3 அபிவிருத்தித் தொடர்பாடல் செயற்திட்டத்தை நடைமுறைப் படுத்தல்**<br>(1) வேலைப்பகிர்வும் பொறுப்பை நிறைவேற்றலும்<br>(2) தகவல் வழங்குதல், அறிக்கை யிடல் / கண்காணிப்பு<br>(3) நன்மைகள், கணிப்பீடு, பின்னூட்டல் |
| | 12.4 அபிவிருத்தித் தொடர்பாடல் செயற்திட்ட மொன்றை நடை முறைப்படுத்த லுடன் தொடர் பான இறுதி அறிக்கையைத் தயாரித்து முன்வைக்கும் தேர்ச்சியை வெளிக்காட்டுவார். | **12.4 இறுதி அறிக்கை தயாரித்தல்**<br>(1) தகவல் திரட்டலும் அறிக்கை யிடலும்<br>(2) விமர்சன ரீதியான புலனாய்வு ரீதியான கலந்துரையாடல்<br>(3) அறிக்கை தயாரிப்பு<br>(4) அறிக்கையை முன்வைத்தல் |